Bml

10 அமைச்சர்களுக்கு எதிராக நாடாளுமன்றில்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 20 இதழ் 355
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 03-02-1992

நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)
அமைச்சரவையிலுள்ள பத்து அமைச்சர்களுக்கு எதிராக வெகுவிரைவில் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை எதிர்க்கட்சிகள் கொண்டு வரவிருக் (4-ம் பக்கம் பார்க்க)

பேச்சுவார்த்தைக்கான சாத்தியக்கூறுகள் குறைவு

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான சாத்தியக்கூறு (4ம் பக்கம் பார்க்க)

மீனவர்மீது கடற்படையினர் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]
வல்வெட்டித்துறையில் சென்ற வெள்ளிக்கிழமை இரவு கடற்படையினர் மீனவர்கள் மீது கலிபர் தாக்கு (4-ம் பக்கம் பார்க்க)

★ புலிகளின் அதிரடியில் தச்சன்காடு

இராணுவ காவலரண் தகர்ப்பு

இரு படையினர் உயிரிழப்பு

நவீன ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தச்சன்காட்டில் இராணுவ காவலரண் ஒன்று விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டது. நேற்று அதிகாலை நடந்த இத்தாக்குதலில் இரண்டு படையினர் பலியாகியதுடன் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:

ரி 56 ரகத் துப்பாக்கி-1, இவற்றுக்குரிய ரவைக் கூடுகள்-2. இலகு இயந்திரத் துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள்-3ம், தொடர் ரவைகள், ரி.56 ரகத் துப்பாக்கி-1, இவற்றுக்குரிய ரவைக் கூடுகள்-2, ஏ கே எல் எம் ஜி. இலகு இயந்திரத் துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள்-3, தொடர் ரவைகள்-300, ஏ கே ரவைகள்-1950, ஜே ஆர் கைக் குண்டுகள்-4, புகைக் குண்டுகள்-2, தொலைத் தொடர்புக் கருவி-1. (வி 150)

சீன ஆயுதங்கள் தரமற்றதால்

இராணுவத்தின் நடவடிக்கை பெரிதும் பாதிப்புறும் ஆபத்து

(மணிலா)
விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசுப்படைகள் நடத்திவரும் போரில், அரசுப்படை பெருமளவு ஆயுதக் குறைபாட்டை எதிர் கொண்டுள்ளது. அத்தோடு பாவிக்கமுடியாத மோசமான நிலையிலுள்ள ஆயுதங்களையும் [illegible] கொண்டுள்ளது.

இலங்கை அரசு சீனாவிடம் கொள்வனவுசெய்த விசைப் படகுகளுக்கும் இயந்திரக் கோளாறுகள் ஏற்பட்டுள்ளன [4ம் பக்கம் பார்க்க]

உதவி வழங்கும் நாடுகள் கூட்டம்

(லண்டன்)
பாரிஸில் இம்மாதம் 7ம் திகதி நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், உலக வங்கி, ஜப்பான் மற்றும் மேற்குலக நாடுகள் ஆகியவை பங்குபற்றுகின்றன. (மா)

வெளிநாடுகளிலுள்ள

தமிழர் நாடு திரும்பினால் அவர்களுக்கு பாதுகாப்பில்லை

(கொழும்பு)
வெளி நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ள தமிழர்கள் இலங்கை திரும்பக் கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை; அவர்களுக்கு இங்கு பாதுகாப்பில்லை என 'கனேடிய மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்குவது பற்றி கவனமாக ஆராய வேண்டும். மக்கள் காணாமல் போவதைத் தடுக்க அரசு போதிய (4-ம் பக்கம் பார்க்க)

திருமலையில் 80, பாடசாலைகள் சேதம்

(கொழும்பு)
திருகோணமலை மாவட்டத்திலுள்ள 80 பாடசாலைகள் அசம்பாவிதங்கள் காரணமாக சேதமடைந்துள்ளன. திருகோணமலை மாவட்டத்திலுள்ள 220 பாடசாலைகளில் 170 பாடசாலைகளே தற்போது இயங்கிவருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (மா)

ஜே. வி. பி லண்டன் கிளையின் கோரிக்கைக்கு அரசு மறுப்பு

(கொழும்பு)
இலங்கை பாதுகாப்பு படையினரின் பாதுகாப்பில் தொடர்ந்தும் இருப்பதற்கு திருமதி விஜயவீரவும் அவரின் 5 பிள்ளைகளும் விருப்பம் தெரிவித்துள்ளதாக அவர்களை (4-ம் பக்கம் பார்க்க)

அரசாங்க ஊழியர்களின்

இடமாற்றம், பதவி நீக்கம் எம் பிக்கள் தலையிடக்கூடாது

(கொழும்பு)
அரசாங்க ஊழியர்களின் இடமாற்றம், பதவிநீக்கம், பதவி உயர்வு போன்ற விடயங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் தலையிடக்கூடாது; என அரசு அறிவித்துள்ளது.

அரச ஊழியர்களின் இடமாற்றம் மற்றும் விடயங்களில் அரசியல்வாதிகளின் (4-ம் பக்கம் பார்க்க)

சமஷ்டி ஆட்சியே ஏற்றது

(கொழும்பு)
வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குச் சமஷ்டி ஆட்சி முறையே ஏற்றது என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். என். ஜா, கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

1990 ஜூன் முதல்

2419 படையினர் பலி

(கொழும்பு)
1990ம் ஆண்டு யூன் மாதம் 11ம் திகதியன்று விடுதலைப் புலிகளோடு ஆரம்பிக்கப்பட்ட போரில், 2,419 படையினர் பலியாகியுள்ளதாகப் பத்திரிகையாளர் மாநாட்டில் ஜெனரல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1944 இராணுவத்தினரும், 16 விமானப் படையினரும், 40 கடற்படையினரும், 16 விசேட அதிரடிப் படையினரும், 413 பொலிஸாரும் கொல்லப்பட்டுள்ளனர் என்றார். (க)

ஜெர்மனியில்

அகதி முகாமில் தீ விபத்து 3 இலங்கைத் தமிழர் மரணம்

[பேர்லின்]
ஜெர்மனியில் இலங்கைத் தமிழர் தங்கியிருந்த அகதி முகாமில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று இலங்கைத் தமிழர் உடல் கருகி இறந்துள்ளனர்.

பிராங்க்பேட்டிலிருந்து 40 மைலுக்கு அப்பால் உள்ள லஸ்ஸாநேபல் என்ற இடத் (4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

மணமகன் தேவை

31 வயதுடைய 7இல் செவ்வாய் (புள்ளி 8) உள்ள பெண்ணுக்கு பெற்றோர் வரன் தேடுகின்றனர். கொக்குவில் பகுதியில் வீடு கொடுக்கப்படும். மற்றும் சீதனமும் வழங்கப்படும். தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல. சி-5916, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(சி-5916)

புத்தகம் கட்டுதல்

உங்கள் பெறுமதிமிக்க புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், நூலகங்களின் நூல்கள், பாடசாலை மாணவமணிகளின் புத்தகங்கள், கொப்பிகள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் மிக அழகான முறையில் உரிய நேரத்தில் கட்டிக் கொடுக்கப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை, 255 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (எ-1910)

இராசி பலன்

03/2/1992
திங்கட்கிழமை
தமிழுக்கு தை 20

அமாவாசை ந இ 12-44 வரை. திருவோணம் வைகறை 6-25 வரை. இராகு காலம் காலை 8-05 முதல் 9-35 வரை. அமாவாசை விரதம்.

மேடம்- எதிர்ப்புக்களை முறியடித்தல், குடும்ப சுகம், பாராட்டு.

இடபம்- மனக்குழப்பம், காரியதாமதம், அச்சம்.

மிதுனம்- தொழில்போட்டி, பெண்களால் தொல்லை, செலவு.

கடகம்- உடன்பிறந்தோர் உதவி, மனநிறைவு, பயணம்.

சிம்மம்- நிர்வாகத் திறமை, அதிக உழைப்பு, காரியசித்தி.

கன்னி- தொழில் குழப்பம், குடும்ப உறவில் விரிசல், விரோதம்.

துலாம்- காரிய விக்கினம், எதிரிகள் தொல்லை, ஏமாற்றம்.

விருச்சிகம்- அந்தஸ்து, பொருள்வரவு, குடும்ப மகிழ்ச்சி

தனுசு- மறதிக்குட்படல், மனச்சஞ்சலம், போட்டி.

மகரம்- தன்னம்பிக்கை, நண்பர் வருகை, தெய்வதரிசனம்.

கும்பம்- எதிர்ப்புகள் வலுவடையும், குற்ற உணர்வு, தாய்ப்பாசம்.

மீனம்- பயணத்தால் நன்மை, உடல்நலக்குறைவு. வீண்செலவு.

-ஜோஸ்யர்

உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் அவை நடாத்தும் ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நாளை மறுதினம் 5ம் திகதி முதல் 12ம் திகதிவரை யாழ். தொழில்நுட்பக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பிரபல அணிகள் பங்குபற்றும் இச்சுற்றுப் போட்டியில் தினமும் இருபோட்டிகள் நடைபெறும். (இ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

51-வது நாள் நினைவஞ்சலி

மலர்வு:
04-07-1967
—
உதிர்வு:
15-12-1991
—
திதி:
03-02 1992

துரை அருட்செல்வம் [செல்வம்]

எங்கள் அன்பின் இருப்பிடமே!
எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத் துயில்கொண்ட எம் அன்புச் செல்வமே......
எங்கள் குடும்பத்தின் குலதீபமாய் ஒளிர்ந்து
கடிதென அணைந்துவிட்ட அருட்செல்வமே......
எமைப் பிரிந்து 51-வது நாள் சென்றாலும்
எங்கள் இதயக்குமுறல் ஓயவில்லையையா......

உமது பிரிவால் வாடும்:
பெற்றோர், சகோதர சகோதரிகள்,
மைத்துனர்மார், அத்தான்மார், அண்ணிமார்,
மருமக்கள், பேரமக்கள், அம்மம்மா.

''[illegible]'',
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(இ 5928)

மாபெரும் வெகுஜனப் போராட்டம்

05-02-1992

தமிழீழ மக்களே!

எம் மண்ணை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினையும், இராணுவ நடவடிக்கைகளையும், பொருளாதார அழுத்தங்களை, விலைவாசிகளின் ஏற்றங்கள், மாணவர்களின் கல்விப் பாதிப்புக்கள், சுகாதாரப் பாதிப்புக்கள், குழந்தைகளின் போஷாக்கின்மை, கடற்தொழில், விவசாயப் பாதிப்புக்கள், ஏழைத் தொழிலாளர்களின் வேலையிழப்புக்கள் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 05-02-92 புதன்கிழமை நடைபெற இருக்கும் மாபெரும் வெகுஜன மறியல் போராட்டத்திற்கு மக்களை அணிதிரளும்படி வேண்டுகின்றோம். மறியல் போராட்டம் யாழ். மாவட்ட அரச அதிபர் பணிமனையில் காலை ஆரம்பமாகும். இவ்வெகுஜனப் போராட்டத்தன்று சகல சுருட்டு உற்பத்தி நிலையங்களும் மூடப்படும். அன்று சகல உற்பத்தி உரிமையாளர்களும், சகல தொழிலாளர்களும் கலந்து கொள்ளவேண்டும் என சங்க நிர்வாகக்குழு கூடி தீர்மானம் எடுத்துள்ளது. இத்தீர்மானத்தின்படி சகல சுருட்டு உற்பத்தியாளர்களையும், சகல தொழிலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நன்றி.

வட பிராந்திய
சுருட்டுத் தொழிலாளர் சங்கம்
தலைமைச் செயலகம்
71, காங்கேசன்துறை வீதி
கொக்குவில்.

(எ 1916)

1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரவேங்கை கஜன்

[ஜெயமாலை முத்து ஜெக்சன்]

பலாலி தெற்கு, வசாவிளான்.

08-05-1975 இன்று உன் மழலை முகம்
எங்கள் ஜெக்சன்
03-02-1991 நாளை உன் வெற்றித்திரு முகம்
தமிழீழத்தின் கஜன்

எம் இனிய மாவீர!
விண்ணேறு ஹெலி, பொம்மர் விளையாடி வந்தாலும்
மண்ணேறி எம்இனத்தின் மானம் காக்க
தச்சன்காட்டில்
ஆள்கொன்று களங்கண்ட அரிய பேற்றால்
மாண்புடைய பேரவிவு பெற்றாய் என
அமைதி கொண்டோம்!

அப்பா, அம்மா, சகோதரர்கள்.

(ஏ-1913)

ஓராண்டு நினைவஞ்சலி

செல்வி

சண்முகநாதன் நாகேஸ்வரி

மலர்வு: 25-09-1969 மறைவு: 15-01-1991
திதி: 03-02-1992

கல்லறையில் வாழும் காலம் வந்ததேன்
இடையில் எங்களை தவிக்கவிட்டு போனதேன்
மழலைமொழி பேசி புன்னகை பூத்த
உன் திருமுகம் எங்கே போனதம்மா.

திருமண ஊர்வலத்தை காணவைப்பாய் என்றிருக்க
மரண ஊர்வலத்தை காணவைத்தது ஏனம்மா
நீ சென்று ஓராண்டு காலம் கழிந்தாலும்
ஓராயிரம் ஆண்டு கழிந்தாலும் மறவோம் உன்னை.

வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

(இ-5923)

“சிங்கள பிரதேச பொருள்கள் நிரந்தரமானதல்ல; உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளியுங்கள்”

தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் ‘ரவி’ பேட்டி

“தமிழீழ மக்களின் உயிர்களின் இறுதி மூச்சுவரைநின்று உதவுவது தமிழீழ மக்களின் உள்ளூர் உற்பத்திகளே எனவே தமிழீழ மக்கள் உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளிப்பதுடன் அவற்றையே பயன்படுத்தி உற்பத்தியை பெருக்கவேண்டும்”.

தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் ரவி “ஈழநாடு” நிருபருக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: போராட்டக் காலங்களில் எல்லாம் எமது போராளிகளுக்கும். பொது மக்களுக்கும் முக்கிய பங்களிப்புச் செய்தவைகள் எமது பனை, தென்னை போன்றவற்றின் மூலம் கிடைக்கும் கிழங்குகளும், தினை, குரக்கன், சாமை, மரவள்ளிக் கிழங்கு போன்ற எமது உள்நாட்டுப் பொருட்களுமே. எனவே அதை ஊக்கமளித்து உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளும் முன்வரவேண்டும்.

தென்பகுதி பொருள்

தற்போது சிங்கள அரசின் இன்னவதேச உற்பத்தி தென்பகுதிப் பொருட்கள் மீண்டும் தமிழீழம் வரத் தொடங்கியுள்ளன. உக்கலோ, உழுத்தோ’ குறைந்த விலையா என்று நாட்டம் கொள்வதீர்

எஸ். சுந்தரலிங்கம்
(வடமராட்சி நிருபர்)

கள். ஆகும் நீங்கள் நாம் கொள்வதால் எந்துமின சுதந்தம் காரதா முறைப்படி வியாபாரிகளும் எமது உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் தேங்குகின்றன.

மேலும் இஞர் உற்பத்திகளும் குறைகின்றன. சிங்கள அரசின் உற்பத்திப் பொருட்கள் நிரந்தரமானதல்ல என்பதை மக்கள் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

மேலும் எமது பொருட்களை தரம் குறைந்தது என ஒதுக்கி அவற்றை எடுத்துக் கூறி நிர்த்திசெய்ய தன்னிறைவு காண ஆலோசனை நம்மை உற்பத்தியைப் பெருக்க உதவும் கள் அவர் மேலும் தெரிவித்ததாவது முன்பு காடுகளை அழித்த கடுப்புகளை பதிறவைத்தோம். இன்று அவற்றை விடுத்து நம்மை நமது முன்னோர்களால் நாட்டப்பட்டமு தமரக்கன தமிழ்த் தற்போது ஓரளவு விறகுப் பிரச்சினையில் தன்னிறைவு கண்டுள்ளோம். இந்நிலையை மேலும் வலுப்படுத்த தமிழீழ மக்கள் அனைவரும் வருடம் முழுவதும் மரங்களை நாட்ட முன்வர வேண்டும்.

புதிய உத்திகள்

முன்பு இலங்கையின் உப்பளம் போன்ற இடங்களிலேயே உப்பு உற்பத்திக்கு நம்பியிருந்தோம். இன்று நமது முன்னோர்கள் பயன்படுத்தி இடையில் கைவிடப்பட்ட உப்பளங்களை வானநாவற்குழி, வடமராட்சி கரணவாய், வல்லை போன்ற உற்பத்தி இடங்களை மீண்டும் பயன்படுத்த ஆரம்பித்துள்

(4-ம் பக்கம் பார்க்க)

6000 பட்டதாரிகளுக்கு உதவ தனியார்துறைக்கு கோரிக்கை

(கொழும்பு)

உதவிகோரி விண்ணப்பித்துள்ள 6000 பட்டதாரிகளுக்கு பயிற்சி அளிக்க தனியார் துறையின் உதவியை அரசு நாடியுள்ளது.

சுமார் 8,500 வேலையற்ற பட்டதாரிகள் அரசின் உதவி கோரி விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 2,500 பேருக்கு பயிற்சியளித்து அரச துறைகளில் வேலைவாய்ப்புகள் அளிக்கப்படவுள்ளது.

மிகுதி 6,000 பேருக்கும் தனியார் துறையே வேலை வாய்ப்பு வழங்க வேண்டுமெனவும் அரசு கோரியுள்ளது. (இ)

எயர்லங்கா அதிகாரிகளுக்கு தமிழர்என்றால் பிடிப்பதில்லை

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகளின் தான்தோன்றிப் போக்கினால் ஜேர்மனிக்கு பயணமாகவிருந்த ஐந்து பேர்கள் கடைசி நிமிடத்தில் மது பிரயாணத்தை கைவிடநேர்ந்தது.

இதுபற்றி பயணம் செய்யவிருந்த பிரயாணி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்:

தமிழர்கள் என்றால் எயர்லங்கா அதிகாரிகளுக்குப் பிடிப்பதில்லை. திருடர்களைப் பார்ப்பதுபோல் பார்க்கிறார்கள்.

இலங்கை அரசாங்கம் வழங்கும் பாஸ்போட்டையும், தூதரகங்கள் வழங்கும் விசாக்களையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கம்பியூட்டர் சோதனை, குடிவரவு அதிகாரிகள் சோதனைகள் எல்லாம் எங்களை இவர்களுக்கும் சுமுகமாக முடிந்தது. விமானத்தில் ஏறுவதற்கான அனுமதிச் சீட்டைபெற எத்தனித்தபோது ஒரு பெண் மணி என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, விசாவிலும், பாஸ்போட்டிலும் சந்தேகமிருக்கிறது என்று கூறினார்.

அப்படியாயின் தூதரகத்துடன் தொடர்புகொண்டு விசாரித்து எம்மை அனுப்புங்கள் என்று அவரோடு தர்க்கித்துக் கொண்டிருக்கும் போது எமக்காக ஒதுக்கப்பட்ட விமானம் சென்றுவிட்டது.

கொழும்பில் பெரிய உத்தியோகம் பார்க்கும் எனக்கு இந்தகதி என்றால் சாதாரண ஆட்களுக்கு என்னென்ன கஷ்டங்களை செய்வார்கள் என்றார். (ஏ)

வடக்கு - கிழக்கு யுத்தத்தில்

பெருமளவுயானைகளும்பலி

(கொழும்பு)

“கடந்த பல வருடங்களாக வடக்கு-கிழக்கு யுத்தத்தில் பெருமளவு யானைகள் கொல்லப்பட்டுள்ளன.

இவ்வாறு யானைகள் பாதுகாப்பு நிதியத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது; கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும், வட மாகாணத்தில் முல்லைத்தீவு, வவுனியா காடுகளிலும் யானைகள் பெருமளவு கொல்லப்பட்டுள்ளன.

பொதுவாகவிமானக்குண்டு வீச்சுகளாலும்ஷெல்தாக்குதல்களாலும், அவர்களுக்குச்சூட்டுச் சம்பவங்களாலும் பல யானைகள் இறந்துள்ளதோடு, கண்ணிவெடி, மிதிவெடியிலும் ஏராளமான யானைகள் இறந்துள்ளன.

யானைத்தந்தம் எடுப்பதற்காகவும் சிலர் யானைகளைக் கொன்றுவருகிறார்கள்.

இலங்கையில் தற்போது மொத்தமாக 3,500 யானைகள் இருக்கின்றன” என்றார்.

நாளை தற்காலிக ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

(உடுவில்)

மருதனார்மடம் கல்விக் கோட்டக் கல்வி வளர்ச்சிக்கழகத்தினரின் ஆதரவுடன் இக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் தற்காலிக ஆசிரியர்கள் சேவைக்கெனத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்குரிய நேர்முகப் பரீட்சைகள் பின்வரும் பாடசாலைகளில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் - உடுவில் கொத்தணி ஆசிரியர்களுக்கு காலை 9மணி முதல் மாலை 4 மணி வரை. மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மானிப்பாய் கொத்தணி ஆசிரியர்களுக்கு காலை 9மணிக்கும் நவாலிக் கொத்தணி ஆசிரியர்களுக்கு பிற்பகல் 1-மணிக்கும் நடைபெறும்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சுன்னாகம் கொத்தணி ஆசிரியர்களுக்கு காலை 9 மணிக்கும் ஏழாலைக் கொத்தணி ஆசிரியர்களுக்கு பிற்பகல் 1 மணிக்கும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கோப்பாய் கொத்தணி ஆசிரியர்களுக்கு காலை 9 மணிக்கும் நீர்வேலி கொத்தணி ஆசிரியர்களுக்கு பிற்பகல் 1 மணிக்கும்; புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியில் புத்தூர் கொத்தணி ஆசிரியர்களுக்கு காலை 9 மணிக்கும், அச்சுவேலி கொத்தணி ஆசிரியர்களுக்கு பிற்பகல் 1 மணிக்கும். உரும்பிராய் இந்துக் கல்லூரியில் உரும்பிராய் கொத்தணி ஆசிரியர்களுக்கு காலை 9மணிக்கும், வசாவிளான் கொத்தணி ஆசிரியர்களுக்கு பிற்பகல் 1 மணிக்கும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும்.

ஆசிரிய தெரிவுக்கு விண்ணப்பித்தவர்கள் குறிப்பிட்ட தினங்களுக்குத் தமது நேர்முகப் பரீட்சைக்கு வேண்டிய சான்றிதழ்களுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (109)

இன்றைய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மாநாடு இன்று 3ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் சேவையாற்றும் நோயாளர் நலன் புரிச் சங்கம் தனது அம்புலன்ஸ் சேவையை மீண்டும் இன்று 3ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. (56)

0 0

(கொழும்புத்துறை)

யாழ். மடம் வீதி இருபாலை ஊர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவி செல்வி சி. ஸ்ரீவசந்தராஜனி தலைமையில் சங்க மண்டபத்தில் இன்று 3ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். [154]

0 0

(கொழும்புத்துறை)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் சமாசத் தலைவர் திரு. செ. சுந்தரசாமி தலைமையில் யாழ். உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இன்று 3ஆம் திகதி திங்கட்கிழமை பி. ப. 5 மணிக்கு நடைபெறும். [154]

0 0

(வடமராட்சி)

வெளியூர் தபால்கள் இன்று திங்கள் முதல் விநியோகிக்கப் படவுள்ளது.

வெளிநாட்டு, வெளியூர் தபால்கள் யாழ். தலைமைத் தபாலகத்திலிருந்து வந்து சேர்ந்துள்ளதாகவும் மேற்படி தபால்கள் இன்று திங்கள் முதல் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் யாழ். தலைமைத் தபாலக உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (51)

0 0

(யாழ்ப்பாணம்)

இன்றைய காலகட்டத்தில் பயிர்ச்செய்கையின் புதிய முறைகளை அறிமுகம் செய்வதை முதன்மையாகக் கொண்டு செயற்படும் பொருண்மிய வ விழாவொன்றை இருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒழுங்கு செய்துள்ளது.

வயல் விழா இன்று 3ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

0 0

(யாழ்ப்பாணம்)

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த அரச சார்பு, அரசசார்பற்ற ஊழியர்கள் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

0 0

(பருத்தித்துறை)

அன்னைபூபதி தேர்வுக்கான அரசியல், விஞ்ஞான தொழில்நுட்பம் பற்றிய கருத்தரங்கு ஒன்று வடமராட்சிக் கோட்ட பாடசாலை (அச்சுவேலி கொத்தணி உட்பட) களின் விஞ்ஞானம், சமூகக்கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பருத்தித்துறை வட - இந்து மகளிர் கல்லூரியில் இன்று 3-ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கிலே விஞ்ஞானம், சமூகக்கல்வி, தமிழ் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் தவறாது கலந்துகொள்ளும்படி விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு; அரசண்ணா கேட்டுள்ளார். (52)

ஓம்
விராட் விஸ்வப் பிரம்மனே நம
திருமண அழைப்பு
இடம்: ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய மண்டபம்
[நாச்சிமார் கோவில்]
காலம் 05 02-1992
மு. ப. 9-36 முதல் 10-36 வரை
மணமகன்: திருநிறை செல்வன்
சிவலிங்கம்
மணமகள்: திருநிறை செல்வி
விஜிதகலா
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
லெஷ்சுமண ஆச்சாரி ப. சோமசுந்தரம் ஆச்சாரி
செல்லாதரன் குடும்பத்தினர், 41, கோவில் வீதி,
3/4, கே. கே. எஸ் வீதி, வண்/வடமேற்கு
யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம்.
(இ 5934)

வட-அமெரிக்காவிலுள்ள தமிழர்

யுத்தத்தை நிறுத்துமாறு கோரிக்கை

(லண்டன்)

வட அமெரிக்காவில் உள்ள தமிழ் மக்களைக் கொண்ட அமைப்பு ஒன்று, இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நடைபெற்றுவரும் சிவில் யுத்தத்தை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த யுத்தத்தை நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகளின் விதி முறைகளைக் கடைப்பிடிக்குமாறும், இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு ஐ. நா.வையும் சம்பந்தப்படுத்திக்கொள்ளுமாறும் இலங்கை அரசை இந்த அமைப்புக் கோரியுள்ளது. (மா)

ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை பலாலி முகாம் பகுதியிலிருந்து சரமாரியான 'ஷெல்' தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இவை தெல்லிப்பளை, குப்பிளான், ஏழாலை ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன. அத்துடன் வளலாய் காவலரண் பகுதியிலிருந்தும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பொது மக்கள் சிலரது வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாகின.

பாடசாலைப் புத்தகங்கள்

(கொழும்பு)

வடபகுதிக்குத் தேவையான பாடசாலைப் புத்தகங்கள், கடந்த வாரம் கப்பல் மூலம் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (கே)

ஆரம்ப நீதிமன்று திறப்பு விழா

[யாழ்ப்பாணம்]

வடமராட்சிப் பிரிவுக்கான ஆரம்ப நீதிமன்றத் திறப்பு விழா நாளை 4-ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 3-00 மணியளவில் வதிரி, கரவெட்டி எனும் விலாசத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப நீதிமன்று மண்டபத்தில் நடைபெறும் என தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவு அறிவித்துள்ளது.

கிராமக் குழு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மேற்கு வட்டவை பிரிவிலுள்ள கைதடி நாவற்குளி - மறவன்புலோ தனங்கிளப்பு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய கிராமக் குழு கடந்த 31ம்திகதி அமைக்கப்பட்டு நிர்வாகத்தினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்குழுவினர் எதிர்வரும் 5ம் திகதி யாழ். செயலகத்திற்கு முன்னால் நடத்தப்படவுள்ள மறியல்போராட்டத்தில் கலந்துகொள்ளப் பொது அமைப்புகளுக்கும், தொண்டர் தாபனங்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

இக்குழு நிர்வாக உறுப்பினர்கள் சனசமூகநிலையங்கள் கிராமமுன்னேற்றச் சங்கங்கள் மற்றும் பொதுதாபனங்களுடன் செயலகமுன்பு 5-ம் திகதி நடத்தப்படும் மறியல் போராட்டம் சம்பந்தமாக தொடர்ந்து கலந்துரையாடல்களை நடத்திவருகின்றனர்.

சீன

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும், மற்றும் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட டாங்கிகளை பயன்படுத்தமுடியாத நிலையில் ராணுவம் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் ராணுவம் புலிகளுக்கு எதிராக உடனடி ராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள முடியாதநிலையிலுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ஆயுதங்களை பரிசீலிக்கும் வகையில் இலங்கை சீனாவுடன் உடனடி நடவடிக்கையில் இறங்கவில்லை. அப்படி செய்தாலும் கூட அந்த ஆயுதங்கள் பயனற்றுப் போகும் என்றும், புலிகளுக்கு எதிரான போரில் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுமென்றும் ராணுவம் கருதுகிறதாம்.

இலங்கை அரசு மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டி மேற்கத்தைய நாடுகள் இலங்கைக்கு ஆயுதம் விற்பனை செய்வதை தடைசெய்திருப்பதால் சீனாவின் தயவையே இலங்கை ஆயுதங்களுக்கு நம்பியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்சிக்கிளைகள் புனரமைப்பு

[கொழும்பு]

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியும், ஐக்கியதேசியக் கட்சியும் தங்கள் கட்சிகளின் கிளை புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

அரசியல் நிலைமைகளுக்கு முகம் கொடுக்கும் விதமாக இந்த புனரமைப்புவேலைகளில் இரு கட்சிகளும்மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [மா]

மன்னார் தாக்குதல்:

அரசு ஊர்ஜிதம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வங்காலையில், விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்திற்குமிடையே நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலில் 7 படையினர் பலியானதாகவும், 3 சிப்பாய்கள் படுகாயம் அடைந்ததாகவும் கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டார். (கே)

வெளிநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. இது கவனத்திற் கொள்ளவேண்டிய விடயம்.

இலங்கையில் உள்நாட்டுப் போரை முடிவிற்கு கொண்டுவர கனடா மற்றும் உதவி வழங்கும் நாடுகளால் முக்கிய பங்காற்ற முடியுமென்றும் இக்குழு தெரிவித்துள்ளது (இ)

சிங்களப் பிரதேச

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னோம். இதன் மூலம் தமிழீழ மக்கள் மீண்டும் பல தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும் மழைநீரைவீணாக்காது தூர்ந்தகுளங்களைப் புனரமைத்து தேவைகளைப் பொறுத்து பல புதிய குளங்களையும் விவசாயப் பெருக்கத்தையும் ஊக்குவிப்போம். எனவே எதிராளியிடமிருந்து எமது தாயகத்தை பாதுகாப்பதோடும், மக்களின் உயிர்களையும் உணவு உற்பத்தி மூலம் தமிழீழ மக்களுடன் இணைந்து காப்போம். (51)

ஜெர்மனியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தில் தமிழர் வாழும் இருமாடிக் கட்டடத்தில் நேற்று முன்தினம் அதிகாலைக்கு சற்று முன்னதாக திடீரென தீ பரவியதாக தெரிவிக்கப்படுகிறது.

தீ பரவியதையடுத்து தூங்கிக் கொண்டிருந்த பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் ஆகியோர் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடியதாகவும் கூறப்படுகிறது.

தீக்காயங்களுக்குள்ளான ஒருவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாகவும் 17 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாஜிஸ்டுகள் இத் தீவைப்பிற்கான சூத்திரதாரிகளாக இருக்கலாம் என பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (க)

தமிழ்மொழி அமுலாக்கலில் தடைகள் நீக்கப்படவேண்டும்

(கொழும்பு)

''தமிழ்மொழி அமுலாக்கலில் இருந்துவந்த தடைகள் உடனடியாக அகற்றப்படவேண்டும்.''

இவ்வாறு பொது நிர்வாக உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா, மாகாணசபை முதலமைச்சர்கள், ஆளுநர்கள், செயலாளர்கள் நடாத்திய கூட்டத்தில் கூறினார்.

மத்திய அரசாங்கம்தான் தமிழ்மொழியை அமுலாக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இல்லாது மாகாண முதலமைச்சர்கள், மாகாண ஆளுநர்கள், மாகாணசபைச் செயலாளர்கள் முடிவெடுத்து அந்தந்த மாகாணசபையில் அமுல்படுத்தவேண்டும்.

தமிழ்மொழி உத்தியோகபூர்வமாக அமுலாக்கப்படாததினால் ஏற்பட்டுள்ள சிக்கல்களை, பின்னடைவுகளையும் இ. தொ. கா. பொதுச்செயலாளரும் கைத்தொழில் இராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

மாகாணசபைகளிலும் பிரதேச சபைகளிலும் மொழி பெயர்ப்பாளர்கள், தட்டெழுத்தாளர்கள் போதிய ஆட்கள் இல்லாமல் அங்கு தமிழ்மொழி அமுலாக்கல் நடைமுறைச்சிக்கல் வெறுமனே சாத்தியமற்ற வசதியில்லாத நிலையில் இருக்கிறது என்று அமைச்சர் செல்லச்சாமி கூறியபோது அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா— ''தமிழ்மொழி அமுலாக்கலுக்குரிய பதவிகளை மத்திய அரசை எதிர்பாராது மாகாண அமைச்சு வெற்றிடங்களை நிரப்பலாம். அந்தந்த தகைமையின் புள்ளிகளையும் அவ்வப்பகுதியில் உள்ள விகிதாசாரத்துக்கேற்ப ஊழியர்களைதேர்ந்தெடுத்து, தமிழ்மொழி அமுலாக்கலைதுரிதமாக நடைமுறைப்படுத்தவேண்டும்'' என்றார். (சு)

ஜே. வி. பி.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் படையினரின் பாதுகாப்பில் வைத்திருப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளதாக கூட்டுப்படை தலைமைத் தளபதி ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பி. தலைவர் காலஞ்சென்ற ரோஹண விஜயவீரவின் மனைவியையும் ஐந்துபிள்ளைகளையும் படையினரின் பாதுகாப்பிலிருந்து விடுவித்து லண்டனுக்கு அனுப்புமாறு ஜே. வி. பி. லண்டன் கிளை இலங்கை அரசைஇரண்டாவது தடவையாக கேட்ட கோரிக்கையை அரசு நிராகரித்ததையடுத்து மேற்கண்ட தகவலை ஹமில்டன் வனசிங்க வெளியிட்டுள்ளார். [மா]

10 அமைச்சர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர்.

இந்த பத்து அமைச்சர்களின் பெயர் விபரங்களை தற்போது வெளியிட விரும்பவில்லை யென்று பதில் எதிர்க்கட்சித்தலைவர் அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். [மா]

மீனவர்மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் மேற்கொண்டனர்

இத்தாக்குதலில் கடலுக்குச் சென்ற நாலு மீனவர்களில் ஒருவர் காயமடைந்தார். ச. பரமசிவன் என்பவரே காயமடைந்த மீனவராவார் மற்றும் மூவரும் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

இவர்களது மீன்பிடி உபகரணங்களும் சேதமடைந்தன. [150]

பேச்சுவார்த்தைக்கான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஏதும் தற்போதைக்கு ஏற்படாதென கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ராஜீவ் கொலைவழக்கில் விடுதலைப் புலிகள் தலைவருக்கெதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டிருப்பதை அடுத்தே முன்பிருந்த சமாதான சூழ்நிலை தடைப்படும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதையடுத்து புலிகளைச் சந்திக்க அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளும் பாதிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது, (சி)

போர்க்கால கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் போர்க்காலக் கருத்தரங்குகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் சனசமூக நிலையங்களில் இக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அகதிகளுக்கு 2000 ரூபா

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து இலங்கை வந்து அகதிமுகாமில் தங்கியிருப்போர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பவிரும்பினால் அவர்களுக்கு 2000 ரூபா வழங்கப்படும் எனவும் அரச ஊழியர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார். (வ)

அரசாங்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலையீடு நிர்வாகத்தில் பல சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதினாலேயே மேற்படி முடிவு எடுக்கவேண்டி ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது

நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கும் இது பொருந்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

மரண அறிவித்தல்

திருமதி முத்தையா நாகமுத்து

சங்கானையை சேர்ந்த திருமதி நாகமுத்து முத்தையா 03-02-92 காலமானார். அன்னார் காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும், பொன்னுத்துரை, ஐயாத்துரை, நல்லம்மா, கனகம்மா, K. M. நடராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகம்மா, சிவபாக்கியம், இராசையா, பத்மநாதன், நவமணி ஆகியோரது அன்பு மாமியுமாவார். அன்னாரது சமக்கிரியை இன்று 3-2-92ல் K. M நடராசாவின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக்கிரியைக்காக சங்கானை முருகிறாவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: K. M, நடராசா

சங்கானை.

(சி-5935)

திருமதி பரமேஸ்வரி மாணிக்கம்

சரவணை கிழக்கைச் சேர்ந்த மாணிக்கம் பரமேஸ்வரி காலமாகிவிட்டார். இவர் மாணிக்கத்தின் அன்பு மனைவியும், சின்னத்தம்பி மாணிக்கம் ஆகியோரின் அன்பு மகளும், சபாபதி மாரிமுத்துவின் அன்பு மருமகளும், நடராசா சாந்தம்மாவின் அன்புச் சகோதரியும், சந்திரசொரூபி, ஜெயந்தினி ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவநாதனின் அன்பு மாமியாரும், சசிகரன், வசீகரனின் அன்பு பேத்தியுமாவார். அன்னாரின் சமக்கிரியை 3-2-92 இன்று திங்கட்கிழமை காலை10 மணிக்கு சீனிவாசகம் ரோட் கொட்டடியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: கு. சிவநாதன்

சீனிவாசகம் ரோட்,
கொட்டடி.

[சி-5936]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the Geueral Post office Sri Lank under Licence Number B/10336/81.